**<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**
**2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ம் நாள் திங்கள்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.3/2025 இன் அசல் வழக்கு எண்.160/2023</u>**

சாந்தி ... மனுதாரர்/ வாதி

/எதிராக/

1. மீனாம்பாள் (இறந்துவிட்டார்)
2. மகாலட்சுமி
3. சொக்கலிங்கம்பிள்ளை

.... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 01.08.2025 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. சிவகுமார் அவர்கள் ஆஜராகி பின்னர் எதிருரை தாக்கல் செய்யதாதால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் Pleading ஐ ஏற்றுக்கொள்ள அனுமதியளிக்க கோரி இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8 விதி 9 பிரிவு 151 CPC படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரரின் மனு சுருக்கம்</u>**

(2.1)மனுதாரர் தாவா சொத்துக்களைப்பொறுத்து பாகம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு தாக்கல் செய்யப்படும்போது மனுதாரரின் தாயார் உயிருடன் இருந்தார் எனவே, தாவா சொத்துக்களில் தனக்கு 1/3 பாகமும், தனது தாயாருக்கு 1/3 பாகமும், தனது சகோதரி மகாலட்சுமிக்கு 1/3 பாகமும் உண்டு

என்பதால் 1/3 பாகம் வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் மனுதாரரின் தாயார் எவ்வித ஆதரவும் எழுதி வைக்காமல் 05.08.2024-ம் தேதி இறந்துவிட்டார். எனவே, தாவா சொத்துக்களில் வாதிக்கும் 2-ம் பிரதிவாதிக்கும் தலா 1/2 பாகம் கிடைக்கத்தக்கது. அதன்படி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. 1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை 2-ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த எதிர்வழக்குரையில் திருமணத்திற்கு முன்னரே வாதி கர்ப்பமாகிவிட்டதாகவும், எனவே, வேறு வழியின்றி 19.09.1998-ம் தேதி வடபழனியில் வைத்து திருமணம் செய்துகொண்டதாக கூறியுள்ளது உண்மையல்ல. மனுதாரரின் கணவர் அசோக்குமாருக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் இடையே திருமணம் நடைபெற்று அவர்களுக்குள் மன ஒற்றுமை ஏற்படாததாலும், குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக அமையாததாலும் 2-ம் பிரதிவாதியே மனுதாரரை செங்காட்டுப்பட்டியிலிருந்து துறையூருக்கு அழைத்து வந்து சென்னைக்கு அனுப்பி வைத்தார் என்பதே உண்மை. அதன் பின்னரே அசோக்குமாரை வடபழனியில் வைத்து மனுதாரர் திருமணம் செய்துகொண்டார்.

(2.2)அசல் வழக்கின் 3-ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் காவல் நிலையத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில் காவல் நிலையத்தில் 2-ம் பிரதிவாதி வாதி மற்றும் அசோக்குமார் ஆகிய மூவரும் சேர்ந்து வாழ்க்கை நடத்துகிறோம் என்று 2-ம் பிரதிவாதியே சம்மதித்து கையெழுத்து போட்டு புகார் முடிக்கப்பட்டதேயொழிய குடும்ப மானம் காப்பதற்காக தகப்பனார் கேட்டு கொண்டதற்காக 2-ம் எதிர்வாதி சமாதானம் ஆகியதாக கூறுவதெல்லாம் உண்மையல்ல. அன்றைய தேதியிலேயே சொத்தும் வேண்டாம், உறவும் வேண்டாம் கூறிவிட்டு சென்றதாக கூறுயுள்ளதும், 2-ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு சீர்வரிசை செய்த 20 பவுன் நகையுடன் தான் பிரிந்து சென்றுவிடுவதாக பைசல் பேசி ஒப்புக்கொண்டதாக கூறுவது உண்மையல்ல. அவைகளை மறுத்து தான் கூடுதல் Pleading தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. இல்லை என்றால் இதை ஒரு காரணியாக பயன்படுத்தி மனுதாரருக்கெதிராக ஒரு சாரமற்ற வாதத்தை 2-ம் பிரதிவாதி வைக்க கூடும். Reply statement is not a pleading என்ற தீர்வு முடிவுகள் இருந்த போதிலும் திருத்தப்பட்ட உரிமையியல் விசாரணை முறைச்சட்டத்தில் கூடுதல் Pleading தாக்கல் செய்ய வழிவகை கொடுக்கப்பட்டுள்ளதால் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் Pleading ஐ ஏற்றுக்கொள்ள அனுமதியளிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.மனுவின் 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் Pleading -ன் படி தலா 1/2 பாகம் பிரித்துக்கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதால் இந்த மெமோவை ஏற்று உத்தரவாக வேண்டும் என்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**<u>தீர்வு..</u>**

(5.1)மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் தலா 1/3 பாகம் கோரப்பட்டுள்ளதாகவும், தற்போது 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் வழக்குரை பரிகாரத்தை திருத்த வேண்டியுள்ளது என்றும், மேலும் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து கூடுதல் Pleading தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு 3-ம் எதிர்மனுதாரர் சம்மதம் தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குறிப்பாணையில் கூடுதல் Pleading படி தலா 1/2 பாகம் பிரித்துக்கொள்வதில் எவ்வித ஆட்சேபணையுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சி விசாரணைக்கு வாய்தா வைக்கப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்படாத நிலையில் உள்ளது. வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், 3-ம் பிரதிவாதியின் குறிப்பாணையை அனுசரித்தும், 1-ம் பிதிவாதி இறந்துவிட்ட நிலையில் அசல் வழக்கின் வழக்கு பரிகாரத்தை திருத்தி வழக்கு நடத்திவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்ற நிலையிலும் மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.</u>** இல்லை.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.